★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 16உ வியாழன் (1—11—56) ★ ★ வெளியீடு: ஐப்பசி 17உ வெள்ளி (2—11—56) [இதழ் 12

'விடுதலை'க்குத் தரப்படும் 'விலை!'

★

கடந்த ஒரு வாரமாக ஹங்கேரியில் நிகழ்ந்த சம்பவங்களின் விளைவாக 2,500 ரஷ்யர்கள் (இராணுவத்தினர்) கொல்லப்பட்டனர் என்றும், 5,000 பேர் காயமுற்றனர் என்றும் ஹங்கேரி சர்க்கார் வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

ஹங்கேரி மக்களில் கொல்லப்பட்டோர்—காயம்பட்டோர் எண்ணிக்கை 13,000 என்றும், இவர்களில் 3,000 பேர் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிக்காரர்கள் என்றும் அதே வட்டாரங்கள் கணக்குத் தந்துள்ளனவாம்!

அல்ஜீரிய மக்களுக்கு மகத்தான வெற்றி!

பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் வெறி தணிகிறது?

போர் நிறுத்தம் வேண்டும் என பிரதமர் கோரிக்கை

சுதந்திரக் கோரிக்கையைக் கவனிப்பதாக வாக்குறுதி

பிரேஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்க வெறி சற்றுத் தணிந்திருக்கிறது; எனவே, உச்சத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் அவர்களது அடக்குமுறைக் கூச்சலின் 'சுருதி' இனி குறையும் என்று எதிர்பார்க்கலாம்.

இதற்கான அறிகுறிகள், பிரெஞ்சுப் பிரதமர் மாலட், அல்ஜீரியா பற்றி விடுத்துள்ள அறிக்கையில் காணப்படுகின்றன.

அவரது அறிக்கை, அல்ஜீரிய மக்களின் சுதந்திர வேட்கையை பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் முழு இராணுவ பலத்தாலும்கூட அடக்கமுடியாத ஒன்றாகிவிட்டிருக்கிறது என்பதை மெத்த வருத்தத்தோடு ஒப்புவதாயிருக்கின்றன.

எத்தகு கொடிய அடக்குமுறைகளும் ஒரு மக்கள் கூட்டத்தின் சுதந்திர தாகத்தால் உந்தப்படும் விடுதலைக் கிளர்ச்சியை அடக்கிவிடமுடியாது என்ற வரலாறு கூறும் புனிதமான உண்மைக்கு மேலும் ஒரு சான்றாக, அல்ஜீரியாவில் பிரெஞ்சுக்காரருக்கு ஏற்பட்டுவரும் தோல்வியை மறைமுகமாக ஒப்பும் பிரதமர் மாலட்டின் அந்த அறிக்கை அமைந்திருக்கிறது.

"நீண்ட நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் படுகொலைகளை நிறுத்த 'போர் நிறுத்தம்' செய்வோம்; கிளர்ச்சிக்காரர்களே! ஆயுதங்களைக் கீழேபோடுங்கள்!' என்று ஓலமிட்டிருக்கிறார், பிரெஞ்சுப் பிரதமர் மாலட்!

தனது சர்க்கார் மேற்கொண்டுள்ள முடிவுகளை அல்ஜீரிய மக்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புவதாகக்கூறி அவர் விடுத்துள்ள அறிக்கையின் சாரமாவது:—

பிரெஞ்சுக் குடியரசின் கீழ் உள்ள எல்லா அமைப்புகளிலும், அல்ஜீரிய மக்களுக்கு—அவர்களது இனம், தோற்றவாய் ஆகிய வேறுபாடுகள் குறித்துக் கணக்கிலெடுத்துக்கொள்ளாமல், சம அந்தஸ்து தரப்படும் என்ற சர்க்காரின் முடிவை உறுதி செய்கிறோம்.

அல்ஜீரிய மக்களின் பிரதிநிதிகள் பிரெஞ்சு தேசிய சட்டசபையில் பங்கு பெறும் வண்ணம், அல்ஜீரியப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தி — மனம் விட்டுப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, அல்ஜீரியாவுக்கான புதிய அடிப்படைச் சட்டத்தை வகுப்பதற்கும், அல்ஜீரிய மக்களுக்கான பிரதிநிதித்துவ மன்றங்களை நிறுவுவதற்கும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முயற்சிப்போம் என்று உறுதி கூறுகிறோம்.

'போர் நிறுத்தம்' அமுலான உடனேயே, அல்ஜீரியாவுக்கான புதிய அடிப்படைச் சட்டத்தை வகுப்பதற்காக, சுதந்திரமான—விரிவான பேச்சு வார்த்தைகளை நடத்த பிரெஞ்சு சர்க்கார் தயாராகவிருக்கிறது என்று பிரகடனப்படுத்துகிறோம்.

இதுபோன்ற உறுதி மொழிகளைக் காப்பாற்றுவோம் என்று கூறுவதுடன், அல்ஜீரிய மக்களின் சுதந்திரம், உரிமைகள், நலன்கள் ஆகியவை பற்றி அவர்கள் கருத்துக்கு மதிப்பளிப்போம் என்றும் கூறுகிறோம்.

தொழில் துறையில் சனநாயகம் உருவாகும்

ஆமதாபாத், அக். 31—

தனியார் நடத்தும் தொழில் நிலையங்களிலும், பொதுத்தொழில் நிலையங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்கள், தொழில் நடத்துபவர்களுடன் ஒத்துழைக்க வேண்டி ஒன்பது அம்சங்கள் நிறைந்த ஒரு திட்டத்தை இந்திய அரசாங்கம் தயாரித்து வருவதாகத் தெரிகிறது.

தொழில் துறையில் ஜனநாயகத்தை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்

ஒரு சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட வாசகம் ஆங்கிலமொழியா? இந்திமொழியா?

அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் விவாதம்

அலகாபாத், அக். 30—

ஒரு சட்டத்தின் அதிகாரம் பெற்ற வாசகம் ஆங்கில மொழியிலிருப்பதா? அல்லது இந்தி மொழியிலிருப்பதா?—என்ற கேள்வி, அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் எழுப்பப் பட்டிருக்கிறது.

ஒரு 'ரிட்' மனுவின்மீது விவாதம் நடந்தபோது இந்தக் கேள்வி எழுந்தது.

ஆங்கிலம்தான்!

'அரசியல் சட்டம் 348-வது பிரிவின்படி, ஒரு சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்டவாசகம் ஆங்கில மொழியிலிருப்பதுதான்,' என்பதால், நீதிமன்றம் இந்தி வாசகத்தைக் கண்ணுறுவதற்கில்லை,' என்று மனுதாரின் வழக்கறிஞர் வாதிட்டிருக்கிறார்.

உண்மைதான்! ஆனால்....!

இந்தக் கேள்வி, நீதிபதி சதுர்வேதியின் முன்னால் எழுப்பப்பட்டிருக்கிறது.

அவர், "ஆங்கில மொழியிலிருப்பதுதான் அங்கீகரிக்கப்பட்ட வாசகம் என்பது உண்மைதான்; ஆனால்...! ஆங்கில வாசகத்திற்கும் இந்தி வாசகத்திற்கும் இடையே முரண்பாடுகள் இருந்தால், ஆங்கில வாசகத்தைத்தான் கவனிக்க வேண்டும்; ஆனால், இங்கே அப்படி இருமொழி வாசகங்களுக்கு மிடையே வேறுபாடு இல்லை அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில வாசகத்தை வியாக்கியானம் செய்வதில் தான் தகராறு எல்லாம்.

"ஒரு சட்டத்தை வியாக்கியானம் செய்யும்போது, அந்தச் சட்டம் இயற்றப்பட்ட பிரதேச மொழி வாசகத்தின்படியே வியாக்கியானம் செய்யக்கூடாது என்பதற்கு எனக்குக் காரணம் எதும் தெரியவில்லை," என்று குறிப்பிட்டாராம்.

உருப்படாத அம்பர் ராட்டை திட்டம்

ரூ. 19 கோடி பாழடிக்க முடிவு!

தமிழ் நாட்டில் திட்டத்திற்கு வெற்றியாம்

அம்பர் சர்க்கா திட்டத்திற்கு ரூ 19 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாம்!

1958-ம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் 2 இலட்சம் அம்பர் சர்க்காக்களை உற்பத்தியில் ஈடுபடுத்த கதர்—கிராமக் கைத்தொழில் நிறுவனம் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த சர்க்காக்கள் மூலம் 7 அல்லது 8 கோடி கெசம் நூல் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்க, 20 புதிய அம்பர் 'வித்யாலயங்'களும், 3 பிரதேச வித்தியாலயங்களும், 100 புதிய 'சரஞ்சம் காரியாலய'ங்களும், 700 'பிரிசிரமாலய'ங்களும் நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

வெற்றியாம்!

அம்பர் சர்க்கா திட்டம் தமிழ் நாட்டில் மிக வெற்றிகரமாக நிறைவேறி வருகிறது என்றும் 'போர்டு' செயலாளர் கூறியுள்ளாராம்.

மாபெரும் வேலை நிறுத்தம்

ஜப்பானில் நடைபெறுகிறது

ஜப்பான் நாட்டில் இரும்புத் தொழிற்சாலையில் பணியாற்றும் 70,000 தொழிலாளர்களும், 50,000 துறைமுகத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். அடுத்த மாதம் இரயில்வேத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர்.

உள்ளது போதாதாம் — மேலும் வேண்டுமாம்!

உ.பி. காங்கிரஸ் தலைவரின் பேராசை

ஜான்பூர், அக் 28—

"உத்திர பிரதேசத்தில் இன்னும் அதிக கனரகத் தொழில்கள் ஏற்படுத்த வேண்டும்; இதுவரை அளிக்கப்பட்டுள்ளது மாநில மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இல்லை. இந்த நிலை தொடர்ந்தால் அண்மையிலுள்ள மாநிலங்களுக்கு மூலப் பொருள்களை அனுப்பும் ஒரு விவசாய மாநிலமாகவே உத்திரப் பிரதேசம் இருந்துவரும்"

என்று, 37-வது உத்திரப் பிரதேசக் காங்கிரஸ் அரசியல் மாநாட்டில் தலைமை உரை நிகழ்த்தும்போது உ. பி. காங்கிரஸ் குழுத் தலைவர் உபாத்யாயா என்பவர் குறிப்பிட்டாராம்.

'சர்க்கரை உற்பத்திக்கு ஒழுங்குமுறையான திட்டமில்லை'

'அவசரகோல வளர்ச்சி ஆபத்தானது'

வட நாட்டு உற்பத்தியாளருக்கு மந்திரியின் எச்சரிக்கை.

கான்பூர், அக். 31—

"இந்தியாவின் சர்க்கரை உற்பத்தித் தொழில், அவசரக் கோலம் அள்ளித் தெளித்ததைப்போல வளர்ந்திருக்கிறது; அதன் வளர்ச்சிக்கு ஒழுங்கு முறையாகத் திட்டமிடப்படவில்லை; இஷ்டப்படி, இணக்கமேதுமில்லாதவகையில் அத்தொழில் வளர்ந்திருக்கிறது"

என்று, மத்திய உணவு, விவசாய இலாகா மந்திரி அஜீத் பிரசாத் ஜெயின் குறிப்பிட்டிருக்கிறார்.

"சர்க்கரை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருப்போர் தங்கள் தொழிலை மேலும் விரிவாக்குவதற்கு முன்னர், தொழிலின் இன்றைய நிலை, பிரச்சினைகள், தொழில் பற்றிய சர்க்காரின் அடிப்படைக் கொள்கை இவற்றை உணர்ந்துகொள்ள வேண்டும். அவசர கோலத்தில் தொழிலை வளர்ப்பதில் பலன் இல்லை" என்றும் அவர் கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

வர்த்தக முகம்மாறும்!

"இந்தியாவில் வெகு சீக்கிரத்திலேயே சர்க்கரை வர்த்தகத்தின் முறை கணிசமான அளவு மாறப்போகிறது.

"வரப்போகிற மாற்றம், சர்க்கரை உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் இருபெரும் மாநிலங்களான உத்தர பிரதேசம், பீகார் ஆகியவற்றிற்குப் பிரதிகூலமாக அமையக்கூடியதாகும்"

என்றும் ஜெயின் குறிப்பிட்டாராம்!

தென்னாட்டுச் சர்க்கரை

"உ. பி., பீகார் மாநிலங்களில் உற்பத்தியாகும் சர்க்கரையைவிட பம்பாய், மற்றும் தென்னாட்டு மாநிலங்களில் உற்பத்தியாகும் சர்க்கரையின் விலை குறைவானதாயிருக்கும்.

"பீகார், உ. பி. மாநிலங்களில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 20 சதவிகிதம் மட்டுமே அந்த மாநிலங்களில் விற்கப்படுகின்றன; எஞ்சியவற்றைத் தென் மாநில சர்க்கரையின் விலையைவிட அதிகமானதாயிருந்தால், எப்படி விற்கமுடியும்?" என்றும் அவர் கேட்டாராம்.

அரசாங்க ஊழியர்கள் போனஸ் பெறுவர்

சென்னையிலல்ல — ம. பி.-யில்!

புதிய மாநில அமைப்பையொட்டி மத்தியப் பிரதேச அரசாங்க அலுவலகங்களிலுள்ள நான் காத்தர ஊழியர்களுக்கு ஒருமாதச் சம்பளம் போனசாக வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக முதலமைச்சர் சுக்லா தெரிவித்துள்ளார்.

இந்து மதத்திற்கு 3,000 பேர் தலைமுழுக்கு!

வரும் பொங்கல் புத்தாண்டு விழாவில் 3,000 தாழ்த்தப்பட்டோர் இந்து மதத்திலிருந்து புத்த மதத்திற்கு மாறுவர் என மைசூர் மாநில தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவர் ஆதிமூலம் அறிவித்துள்ளார்.

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 1—11—'56 வியாழன்

பைத்தியம் முற்றுகிறது!

மக்களாட்சி என்ற பெயரால் சர்வாதிகார முறைக்கு அடிகோலிவரும் இந்தியப் பிரதமர் நேரு பெருமகனின் தூண்டுதலுடன், ஒரு புதிய விஷப் பரீட்சையில் இறங்கியிருக்கிறது இந்தியப் பேரரசு. இப்புதிய பரீட்சை, இந்தியப் பிரதமருக்குள்ள அனைத்திந்திய ஆதிக்கப் பைத்தியம் முற்றிவிட்டது என்பதையும் காட்டுவதாக உள்ளது.

ஆங்கில ஏகாதிபத்தியம், இந்தியத் துணைக்கண்டத்தில் எடுத்தடி வைப்பதற்குமுன், அரசியல் துறையில் இந்தியா ஒரு நாடாகஇருந்துவரவில்லை என்ற வரலாற்று உண்மையை, நேரு பெருமகனும் வாய்ப்பு நேரும் பொழுதெல்லாம்சுட்டிக்காட்டி வந்திருக்கிறார். அதுவுமன்றி, தென்னாட்டின்மீது வடநாட்டினர் அரசியல்துறையில்என்றும் ஆதிக்கம் செலுத்தினது கிடையாது—ஆதிக்கம் செலுத்த எடுத்த முயற்சிகள் அனைத்தும் படுதோல்வி பெற்றுள்ளன என்ற வரலாற்றின் சான்றுகளையும் இந்தியப்பிரதமர் நன்கு அறிந்தே இருக்கிறார்.

இருந்தாலும் வரலாறு போதிக்கும் படிப்பினையைச் சிறந்ததோர் முன்னறிவிப்பாகக்கொண்டு, ஆங்கில ஏகாதிபத்தியம் இத்துணைக்கண்டத்தைவிட்டகன்றதும், குறிப்பாகத் தென்னாட்டின் ஆட்சிப் பொறுப்பை, அப்பகுதி மக்களிடம் ஒப்படைப்பதைத்தான், வெளியேறிய ஏகாதிபத்தியத்திடமிருந்து, காங்கிரசுக் கட்சியின் தனிப்பெருந் தலைவர் என்ற முறையில் அதிகாரத்தைப்பெற்ற நேரு அவர்கள் செய்திருக்க வேண்டும். ஆனால் நேரு அவர்களோ, காங்கிரசுக் கட்சியின் அறிவும் ஆற்றலும் பரந்துகிடக்கிறது, அதை என் தமது விருப்பத்திற்கொப்பப் பயன்படுத்தாமல் விடவேண்டும் என்ற எண்ணத்தில், தென்னாட்டையும் தமது வடநாட்டு ஆதிக்கத்தில் பிணைத்துவிட்டார்.

அந்த ஆதிக்கத்தை நிலைத்த உண்மையாக்க, காங்கிரசுக் கட்சியே ஒரு பெரிய சாதனமாகும் என அவர் நம்பிக்கிடக்கிறார். அதனால்தானே என்னவோ, காங்கிரசில் இடம் பெற்று இருக்கின்ற கும்பல் சண்டை கண்டு குழம்புவதும், அதிகாரத்துக்கு ஒருவரோடு ஒருவர் அடித்துக்கொள்வதை எண்ணிக் கலங்குவதும், காங்கிரசுக் கட்சியின் வரலாற்றுப் பணி குறித்து அடிக்கடி அறிவுறுத்துவதும், இந்தியாவின் ஒற்றுமை நல்ல கடைக்காலின் மீது கட்டப்படுவதற்கு மேலும் முப்பதாண்டுக் காலம் காங்கிரசு சிதைவுறாது இருக்கவேண்டும் என வற்புறுத்துவதுமாக, இந்தியப்பிரதமர் நேரு இருந்து வருகிறார்போலும்!

இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய விடுதலை வேட்கையை ஆங்கில ஏகாதிபத்திய 'இரகஜகாகபதா திகளால்' கெல்லி எறிந்துவிட முடியவில்லை. சுவைதரும் வகைவகையான பதவி பானத்தை அளித்தும்கூட மக்களின் சுதந்திர தாகத்தைத் தணித்துவிட முடியவில்லை ஆங்கில ஏகாதிபத்தியத்தால்.

அவுரங்கசீப்பும், அக்பரும், அசோகனும் தங்கள் வாழ்நாட்களில் சாதிக்க முடியாத ஒன்றை, ஏகாதிபத்தியத்தின் உதவியால் தாம் சாதித்துவிட்டதாக இந்தியப் பிரதமர் நேரு, களிப் பேருவகை கொண்டிருக்கிறார். அதை நிலைபேறுடையதாக்கும் முயற்சியிலும் அவர் தீவிரமாக ஈடுபட்டுவருகிறார்.

தேசிய உணர்வு ஒடுக்க முடியாதது—ஒழித்துக்கட்ட முடியாதது—அடையாளம்தெரியாமல் உருக்குலைத்துவிட முடியாதது என்ற உறுதிவாய்ந்த உண்மையை, உலகவரலாற்று ஆசிரியர்களில் ஒருவராக விளங்கும் இந்தியப் பிரதமர் அறிந்திருக்கமாட்டார் எனக் கொள்வது பொருந்தாது. உலக வரலாற்று உண்மை அறிந்தும் இந்தியப் பிரதமர், என்றும் வெற்றிபெற முடியாத ஒரு முயற்சியில் ஈடுபடுகிறார் என்றால், அவருடைய ஆதிக்க நப்பாசையைத்தான் அதற்குக் காரணமாகக் கூற வேண்டும்.

ஏதோ, அரசியல் துறையில் ஆதிக்கம் செலுத்தினவரையில் இலாபம், பொருளியல் துறையில் சூறையாடினவரையில் இலாபம் என்ற எண்ணத்தில் தான், தென்னாட்டின்மீது வடநாட்டின் ஆதிக்கம் இருந்து வருவதற்கு, நேரு பெருமகன் அடிகோலி வருகிறார் என்றே நாம் கருத வேண்டியவர்களாகிறோம். அந்த நினைப்பின் ஒரு கூறுதான் புதிய ஆண்டுக் குறிப்பேடுத் திணிப்பும் எனக் கூறுவது மிகையாகாது.

அரசியல் சட்டத் தொகுப்பில் துவங்கி, காங்கிரசுக் கட்சிக்குள்ளாகவே புயலெனக் கிளம்பிய பலத்த எதிர்ப்பையும் அலட்சியப்படுத்தி இந்திமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டு, 'நயா பைசா' என்ற நாணய முறையைக் கைப்பிடித்து, அனைத்திந்திய ரீதியில் நிறுத்தல் அளவையும், அளத்தல் அளவையும் ஒன்றாக்கும் முயற்சியை மேற்கொண்டு, இறுதியாகப் புதிய சாக ஆண்டுக் குறிப்பேடு என்ற புதிய ஆண்டுக் குறிப்பேட்டைத் திணிக்கும் இடத்திற்கு, இன்று இந்தியப் பிரதமர் நேரு பெருமகன் வந்து நிற்கிறார்.

இப்பொழுது வழங்கப்பட்டு வரும் ஆங்கில ஆண்டுக் குறிப்பேடு கிரிகோரி ஏற்பாடு என வழங்கப்படுவதாகும். இக்குறிப்பேட்டை உலகத்தில் உள்ள பெரும்பான்மையான நாடுகள் பின்பற்றிவருகின்றன.

கிரிகோரி 'காலண்டர்' என வழங்கும் நடைமுறையில் நம்மால் கையாண்டுவரப்படும் ஆண்டுக் குறிப்பேடு 1582-ல் மூன்றாவது போப் கிரிகோரியால் திருத்தியமைக்கப்பட்டதாகும். அன்று முதல் இன்று வரை அக்'காலண்டர்' உலக வழக்கில் இருந்துவருகிறது.

இப்பொழுது அக்'காலண்டரை' மாற்றி அமைத்து, ஒரு புதிய 'காலண்டரை' இந்தியத் துணைக்கண்டத்தில் திணிக்க இந்தியப் பேரரசு முன்வந்திருக்கிறது. அப்புதிய 'காலண்டர்' அடுத்த ஆண்டு மார்ச்சு மாதம் 22-ந் தேதி நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என இந்தியப் பேரரசு அறிக்கை ஒன்று கூறுகிறது.

இப்புதிய 'காலண்டர்' 'சாக சகாப்தம்' என அரசாங்க அறிக்கை ஏடும், 'சகா சகாப்தம்' எனப் பத்திரிகைகளும் அழைக்கின்றன.

இப்புதிய 'சாக சகாப்தம்' பன்னிரண்டு மாதங்களைக் கொண்டுள்ளன. அம்மாதங்களின் பெயர்களைத் தென்னாட்டு மக்கள் உச்சரிப்பதற்கே சங்கடப்படுவர்.

'சைத்ரம்', 'வைசாகம்', 'ஜேஷ்டா', 'ஆஷாட', 'ச்ரவண', 'பாத்ரா', 'அச்வின', 'கார்த்திகா', 'மார்க்கசிர', 'பைஷ' 'மாக', 'பல்குன' ஆகிய இப்புதுப் பெயர்கள்தான் சாக சகாப்தத்தின் மாதப் பெயர்களாகும். இம்மாதங்களில் வடநாட்டின் அரசியல் ஆதிக்க நெடிநாற்றம் மூக்கைத் துளைக்கிறது.

உலகவழக்கிலுள்ள 'காலண்டரை' நாம் இதுவரை மேற்கொண்டு வந்ததினால், இந்தியத் துணைக் கண்டத்துக்கு வந்துள்ள இடுக்கண் யாது? இப்புதிய 'சாக சகாப்த'த்தை ஏற்றுக் கொள்ளுவதால் ஏற்படப்போகிற இலாபம் என்ன?

இதுபற்றி இந்தியப் பேரரசு விளக்கம் தரவில்லை. இப்புதிய காலண்டர் திணிப்புமுயற்சியில் நமக்குத் தெரிவதெல்லாம், இந்தியப் பேரரசை ஏற்கனவே பற்றிக்கொண்டு இருக்கும், அனைத்திந்தியப் பைத்தியம் முற்றிவருகிறது என்றப் பேருண்மையேயாகும்.

குழப்பத்தை உண்டாக்கும் புதிய ஆண்டுக் குறிப்பேடு!

'சீர்திருத்தம்' என்ற பெயரால் இந்திய சர்க்கார் திணிக்கிறது!

இப்போது, அனைத்திந்தியாவிற்கும் ஒரே 'ஆண்டுக் குறிப்பேடு' ('காலண்டர்')தான் இருக்கவேண்டுமென்றும், அக்குறிப்பேடு, 1957-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ந் தேதியன்று செயற்படுத்தப்படுமென்றும் டில்லி ஆட்சியினர் அறிவித்துள்ளனர்.

தற்போழுதுள்ள 'கிரிகோரியன்' காலண்டருடன் கூட, சில அரசாங்க அலுவலக விஷயங்களுக்காக 'சக சகாப்த'த்தையும் அங்கீகரிப்பது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

காலண்டர் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசுகளின்படி கீழ்க்கண்ட முடிவுகள் செய்யப்பட்டுள்ளன :—

1. அரசாங்கக் காரியங்கள் சம்பந்தமாக கிரிகோரியன் காலண்டர் தொடர்ந்து உபயோகப்படுத்தப்படவேண்டும்.

2. 1957 மார்ச் 22-ம் தேதியிலிருந்து புதிய காலண்டர் அமுலுக்குவரும்; இது சைத்ரம் 1ந்தேதி 1879 சக சகாப்தத்திற்குச் சரியானதாகும்.

கிரிகோரியன் காலண்டருக்கு ஏற்ப புதிய காலண்டரை கீழ்க்கண்ட முறையில் பயன்படுத்தலாம்.

(அ) அரசாங்கக் கெஜட் வெளியாகும் தேதிப் பிரசுரத்தில் புதிய, பழைய காலண்டர் தேதி குறிப்பிடப்பட வேண்டும்.

(ஆ) அகில இந்திய வானொலிச் செய்தி ஒலிபரப்புகளில் புதிய தேதியும், கிரிகோரியன் தேதியும் குறிப்பிடப்பட வேண்டும்.

(இ) புதிய தேசிய காலண்டரை உபயோகப்படுத்தும் படி மாகாண அரசாங்கங்களுக்கு சிபாரிசு செய்யவேண்டும்.

(ஈ) மத விழாக்கள் சம்பந்தமான விடுமுறைகளில் தற்போது பின்பற்றப்படும் பழக்கமே தொடர்ந்து இருக்கும்; அதில் மாற்றம் எதும் இல்லை. காலண்டர் சீர்திருத்தக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட தேதிகள் முடிந்த அளவு பின்பற்றப்படும்.

(3) பொது மக்களின் நன்மையைக் கருதியும், பஞ்சாங்கம் தயாரிக்கும் வேலையைக் கருதியும் குழுவின் அறிக்கை இந்தியாவின் பல்வேறு மொழிகளிலும் வடமொழியிலும் பிரசுரிக்கப்படும். முக்கியமான புத்தக விற்பனை நிலையங்களிலும், அரசாங்கப் புத்தக விற்பனை நிலையங்களிலும் குழு அளித்த அறிக்கையின் ஆங்கிலப் பிரதிகள் விற்பனைக்கு அனுப்பப்படும்.

மத சம்பந்தமான காரியங்களில் புதிய காலண்டரே பின்பற்றப்படவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல; மத சம்பந்தமாக தேதி நிர்ணயம் செய்ய விரும்புகின்றவர்கள், தங்கள் விருப்பத்திற்கேற்ப புதிய காலண்டருக்கு ஏற்றபடி நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

குழுவின் சிபாரிசுப்படி கிரிகோரியன் ஆண்டைப்போல சகா ஆண்டிற்கும் 365 நாட்களே இருக்கும். 'லீப்' ஆண்டிற்கு 366 நாட்கள் இருக்கும்.

சாகா ஆண்டு கீழ்க்கண்ட விதத்தில் பிரிக்கப்பட்டிருக்கும் :—

சைத்ரம்—30 நாட்கள் (லீப் ஆண்டில் 31 நாட்கள்); வைசாகா—31; ஜேஷ்டா—31; ஆஷாட—31; ச்ரவண—31; பாத்ர—31; அச்வின—30; கார்த்திகா—30; மார்க்கசிர—30; பைஷ—30; மாக—30; பல்குண—30 நாட்கள்

புதிய காலண்டரும், கிரிகோரியன் காலண்டரும் கீழ்க்கண்ட விதத்தில் சம்பந்தம் உடையனவாக இருக்கும் :—

கிரிகோரியன் காலண்டர் மார்ச்சு 22-ம் தேதியில் புதிய காலண்டரில், சைத்ரம் முதல் தேதியாக இருக்கும்; லீப் ஆண்டில் அது மார்ச்சு 21-ம் தேதியாக இருக்கும்.

வைசகா 1—ஏப்ரல் 21; ஜேஷ்டம் 1—மே 22; ஆஷாட 1—ஜுன் 22; ச்ரவண 1—ஜுலை 23; பாத்ர 1—ஆகஸ்டு 23; அச்வின 1—செப் 23; கார்த்திகா 1—அக். 23; மார்க்கசிர 1—நவம்பர் 22; பைஷ 1—டிசம்பர் 22; மாக 1—சனவரி 21; பல்குண 1—பிப்ரவரி 20.

துருப்புகளைத் திரும்பப் பெறுவதுபற்றி ரஷ்ய மந்திரி

வார்சா ஒப்பந்த நாடுகளின் அனுமதி வேண்டுமாம்

பாரிஸ், அக். 30—

"ஹங்கேரியிலிருந்து ரஷ்யத் துருப்புகளைத் திரும்பப் பெறுவதற்கு, வார்சா ஒப்பந்த நாடுகளின் சம்மதம் தேவை,"

என்று, ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மார்ஷல் ஜுகாவ் தெரிவித்திருக்கிறார்.

'ரஷ்யத் துருப்புகளைத் திரும்பச் செய்வேன்' என்று ஹங்கேரி பிரதமர் நாகி தந்துள்ள உறுதி மொழி பற்றிக் கேட்டபோது, ஜுகாவ் வார்சா ஒப்பந்தம் ஒன்றிருக்கிறது; எனவே இந்தக் கேள்விக்குப் பதில் ஒப்பந்த நாடுகளின் சம்மதத்தைப் பெற்றிருக்கிறது. அவற்றின் முடிவு அமுல் செய்யப்படும்' என்று பதிலளித்தாராம்.

பெருமைக்குரியதுதான்!

புதுடில்லி, அக். 31—

1956—57-ம் ஆண்டில் ஜப்பானிய முறைப்படி எவ்வளவு ஏகர் நிலம் சாகுபடியாக வேண்டும் என்று குறிப்பிடப்பட்டதோ, அதைவிட 1955—56-ம் ஆண்டிலேயே அதிக ஏகர் பயிர் செய்யப்பட்டுள்ளதாம்.

சென்ற மூன்று ஆண்டுகளாக ஜப்பான் முறைப்படி பயிர் செய்ததில் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறதாம்.

இரண்டாவது ஐந்தாண்டுக் கால முடிவுக்குள் 40 இலட்சம் ஏகர் ஜப்பானிய முறைப்படி பயிர் செய்யப்படும்; இதனால் 10 இலட்சம் டன் அரிசி அதிகமாக உற்பத்தியாகும் என்று கருதப்படுகிறது—அதாவது, ஒரு ஏக்கருக்கு அரை டன் வீதம் விளைச்சல் அதிகம் ஆகும்.

தமிழ்ப் பேராசிரியர்களுக்கு இலங்கைத தமிழர் வரவேற்பு

சிங்கப்பூர், அக். 30—

மலேயா பல்கலைக் கழகத்தில் இந்திய இலக்கியப் படிப்புக்காகப் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தமிழ் இலாகாக்களின் பொறுப்பை ஏற்பதற்கு இந்தியாவிலிருந்து இங்கு வந்துள்ள பேராசிரியர்கள் எம். இராசாக்கண்ணனுக்கும், சி. எஸ். பிச்சமுத்துவுக்கும் சிங்கப்பூர் தமிழர்கள் ஒரு வரவேற்பு உபசாரம் அளித்தனர்.

சென்னை அரசாங்கம், அந்தப் பல்கலைக் கழகத்திற்கு 5,000 புத்தகங்களை நன்கொடையாக அளித்துள்ளது.

சுய ஆட்சி சர்க்கார் இயங்குவதற்கு ஆதரவு

பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டு, சுய ஆட்சி சர்க்காராக டோகோலாந்து இயங்குவதற்கு ஆதரவாக பொதுமக்கள் வாக்கெடுப்பில் பெருவாரியான ஓட்டுகள் கிடைத்துள்ளதாம்.

பழைய முறையே நீடிக்க வேண்டும் என்று விரும்பிய கட்சிக்கு மிகக் குறைவான ஓட்டுகள் பதிவாகியதாம்!

தேனீ வளர்ப்பதற்கு பயிற்சி அளிக்கப்படுமாம்

மத்திய அரசாங்கத்தின் திட்டம்

புதுடில்லி, அக் 31—

தேனீ வளர்ப்பு விஷயமாக மத்திய ஆட்சி ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது.

விவசாயிகளுக்குத் தேனீ வளர்ப்பதில் பயிற்சியளிக்க 100 துணை நிலையங்களும், மேலும், ஐந்து பகுதி அலுவலகங்களும் ஏற்படுத்தப்படுமாம்.

50 பள்ளிகளில் தேனீ வளர்ப்பு ஒரு பாடமாக வைக்கப்படும்.

இதற்காக இந்தியக் கதர் கிராமத் தொழிற் கழகத்திற்கு, மானியமாகவும் கடனாகவும், ரூ. 16 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

இது உண்மைதானா?

சீனாவின் எண்ணெய் வளம் பொருந்திய சிங்கியாங் மாநிலத்தில் புரட்சி எதிர்ப்பாளர்கள் கலகம் செய்ததாகவும் பல அதிகாரிகள் உயிர் துறக்க நேர்ந்ததாகவும் சியாங்கின் சீன தேசிய மத்திய செய்தி நிலையம் அறிவித்துள்ளதாம்.

திருவல்லிக்கேணியில் நபிகள் நாயகம் விழா

அண்ணா, என். வி. நடராசன் கலந்து கொண்டனர்

சென்னை, அக் 29—

திருவல்லிக்கேணி முஸ்லிம் முன்னேற்ற வாலிபர் சங்கத்தின் சார்பில் நபிகள் நாயகம் பிறந்த நாள் விழா, சேக் தாவூது தெரு நகர சபை முஸ்லிம் பள்ளியில் நடைபெற்றது.

விழாவிற்கு டாக்டர் சி. உசேன் தலைமை வகித்தார்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் பி. ஏ. அப்துல்கனி, டி. ஆர். அபூபக்கர், புலவர் ஆபீதின், எஸ். முகமது லெப்பை, எஸ். எம். அப்துல்காதர் தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், திருப்பூர் மைதீன் ஆகியோர் பேசிய பின்னர், அண்ணா அவர்கள், முகமது நபியைப் பற்றியும், இஸ்லாத்தைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் அரியதோர் உரை நிகழ்த்தினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் எஸ் முகமது லெப்பை நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

தொடர்ந்து மழை பெய்திருந்தும் ஏராளமான பொதுமக்கள் அண்ணா அவர்களின் பேச்சு முடியும்வரை அமைதியாக வீற்றிருந்து கருத்துக்களைக் கேட்டுச் சென்றனர்.

'தோழர்களின் பொறுப்பு வளர்கிறது'

'கட்டுப்பாடாக பணியாற்ற முனைவீர்'

திருமங்கலத்தில் அண்ணா, நடராசன்

மாயூரம் வட்டம்—திருமங்கலத்தில், திராவிடமுன்னேற்றக்கழகச் சார்பில், 26—10—56 மாலை 6 மணிக்கு மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று சிறப்புற நடந்தேறியது.

இந்த ஊருக்கு ஒழுங்கான பாதையில்லாதிருந்தும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

வழிநெடுக கழகக் கொடிகளாலும், வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பொதுக் கூட்ட மேடை அமைப்பும் கண்களுக்கு விருந்தளித்தது.

கூட்டத்திற்கு மாயூரம் தோழர் என். கிட்டப்பா அவர்கள் தலைமை வகித்தார்

துவக்கத்தில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் கழகக் கொள்கையினை விளக்கிப் பேசினார்.

அடுத்துத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், தேர்தல் ஆய்வுக் குழுவினரிடம், நாடெங்கும் கழகத் தோழர்கள் காட்டிய ஆர்வத்தையும், தேர்தலில் கழகம் போட்டியிட வேண்டும் என்ற உணர்ச்சியையும் எடுத்துக் கூறியதோடு, கழகம் துவக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை கழக ஆதரவாளர்களும் பொது மக்களும், அவ்வப்போது கழகம் விடுத்த வேண்டுகோளை நிறைவேற்றியும், கழக நடவடிக்கைகளுக்கு ஆதரவு தந்தும், கழக வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தும் வருவதுபோன்று, தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடும் பணியினையும் இனிது நிறைவேற்றித்தர பொதுமக்கள் தங்களின் பேராதரவைத் தரவேண்டுமென்றும், தேர்தல் நிதிக்கு ஒவ்வொருவரும் கூடுமான அளவு உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இறுதியாக அண்ணா அவர்கள் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகம் 150 இடங்களில் போட்டியிடுவதென்பது தென்னாட்டு அரசியல் வரலாற்றிலேயே ஓர் புதுமையாயிருக்கலாம்; இதை எண்ணிப் பார்க்கும்பொழுது எனக்குச் சற்றுத் திகைப்பு ஏற்படுகிறது; என்றாலும், தேர்தல் ஆய்வுக் குழுவினர் அளித்த விவரங்களிலிருந்து, ஆங்காங்குள்ள நமது கழகத் தோழர்கள் காட்டிய ஆர்வம் மட்டுமல்லாமல்—'தேர்தலில் வெற்றியோ தோல்வியோ அதைப்பற்றிக் கவலைப்படாமல், நம் தாயகத்திற்குக் காங்கிரஸ் சர்க்கார் விளைவித்து வரும் கொடுமைகளையும், நம் நாட்டின் உரிமைகளைக் காப்பாற்றத் தம்பியதோடல்லாமல் இருந்து வரும் மிகச் சாதாரண உரிமைகளைக் கூட நேரு சர்க்காருக்குக் காணிக்கையாகச் செலுத்திவிட்டு நம் மக்களைத் தவிக்கவைக்கும் அவலநிலையையும் மக்கள் மன்றத்திற்குமுன் மேலும் விவரித்துக் கூறவும், அவர்களை விழிப்புறச் செய்யவும் பயன்படட்டும்; அதுவல்லாமல், நம் கடமையை நிறைவேற்றினோம் என்ற மகிழ்ச்சியுடன் தேர்தலில் ஈடுபடுகிறோம்,'—என்று உறுதி கூறியிருக்கிறார்களே, அந்தத் தூய்மையான எண்ணத்தை நான் மனமார வரவேற்கிறேன்; அதனால் தான் நமது கழகம் 150 இடங்களில் போட்டியிடவும் சம்மதித்தேன் இதில் எத்தனை இடங்களில் வெற்றி கிடைக்கும் - அல்லது, தோல்விகள் ஏற்படும்—என்பதல்ல நமக்கு முக்கியப் பிரச்சினை; ஆனால், இந்த 150 இடங்களிலும் காங்கிரஸ் அபேட்சகர்கள் தேர்தலை இதுவரை எண்ணியிருந்ததைப்போல சாமானியமானதாகவும், அல்லது ஓட்டுகளை எந்தவகையிலாகிலும் வாங்கிவிடலாமென்றும் இறுமாந்திருக்க முடியாதென்பதை நினைவூட்டுகிறேன்.

"நாம் 150 இடங்களில் போட்டியிடுவது என்று முடிவுக்கு வந்திருப்பதைக் கண்டு கழகத் தோழர்கள் பெரும் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள்; ஆனால், அந்த அளவுக்கு நாம் பெரும் பொறுப்பைத் தாங்க வேண்டியிருக்கிறதென்பதையும், அதனை நிறைவேற்றும் கடமையில் கட்டுக்கோப்பாக பணியாற்ற வேண்டுமென்பதையும் கழகத் தோழர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கையைத்தான் கழகம் பெரும் துணையாகக் கொண்டிருக்கிறது. எனவே, அடுத்துவரும் தேர்தலில் கழகத் தோழர்கள் இதுவரை காட்டிவந்த அக்கரையை விட அதிக ஊக்கமும், உற்சாகமும் கொண்டு பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

மேலும் அவர் பேசுகையில், காங்கிரஸ் ஆட்சியில், இராணுவத்திற்காக 200 கோடி ரூபாய் போல செலவழிக்கப்பட்டு வரும் அநீதியையும், மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களின் பேரால் திராவிடம் புறக்கணிக்கப்பட்டு வருவதையும் எடுத்துக்கூறினார்.

தோழர் ரகீம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

அண்ணா அவர்களுக்கும், தோழர்கள் என். வி. நடராசன், என். கிட்டப்பா ஆகியோருக்கும் பல கிளைக் கழகங்களின் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

தேர்தல் நிதிக்காக திருமங்கலம் தி. மு. கழகச் சார்பில் ரூ. 30; பிரான்குடி பொதுமக்கள் சார்பில் ரூ. 10; செம்புகச்சேரி தங்கராஜ் ரூ. 2; காளி தி. மு. கழக தோழர் ஆதப்பன் ரூ. 2; பனையூர் பழனியப்பன் ரூ. 2; கழக அனுதாபி ஒருவர் 64 காலணாகொண்ட மாலை ரூ 1;—ஆக ரூ. 47 நன்கொடை அளிக்கப்பட்டது.

ஆள் பஞ்சமாம்!

1956 ஜுன் மாதத்தோடு முடிவடைந்த காலத்தில் சுருக்கெழுத்தாளர்கள், டைப்பிஸ்டுகள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், ஓவர்சியர்கள், மருத்துவச்சிகள் ஆகிய பதவிகளுக்கு ஆள் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக வேலை தேடித்தரும் நிலையத்தின் டைரக்டர்-ஜெனரல் அறிவித்துள்ளார்.

நாடகாசிரியர் சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு விழா

தமிழ் நாடகத் தலைமைப் பேராசிரியர் சங்கரதாஸ் சுவாமிகள் புதுவையில் 34 ஆண்டுகளுக்குமுன் அடக்கமான சமாதியின் முன்பாக 13-11-56-ல் அவரது நினைவு நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவதென்றும் சமாதியில் ஓர் சிறிய மண்டபம் எழுப்புவதென்றும் 25-10-26-ல் கூடிய புதுவை நகரப்பிரமுகர்கள் அடங்கிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

முன்னாள் நிதி-கல்வி அமைச்சர் திரு. கருணேந்திரமுதலியார் கமிட்டியின் தலைவராகவும், புதுவை அசெம்பிளி எதிர்க்கட்சித் தலைவர் திரு. வி. சுப்பையா செயலாளராகவும், திரு. கந்தசாமிபிள்ளை பொருளாளராகவும் கொண்ட 60—பேர் கொண்ட நினைவு விழாக் குழு அமைக்கப்பட்டது; விழாவை வெற்றிகரமாக நடத்துவதற்காகப் பல உப-குழுக்களும் நிறுவப்பட்டன. இக்கூட்டத்திற்குத் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் பிரதிநிதிகளாக சங்கச் செயலாளர் டி. என். சிவதாணுவும், டி. கே. சண்முகமும், டி. கே. பகவதி ஆகியோரும் கலந்து கொண்டனர்

13-11-56 காலை 9 மணிக்கு சமாதிமுன் அமைக்கப்படும் பந்தலில் புதுவை மாநில நீதிபதி சிவா தலைமையில் சுவாமிகளின் குருபூசையும் அதையொட்டி நடிக நடிகையரின் சொற்பொழிவுகளும், மாலையில் புதுவைத் தியேட்டரில் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

இராயபுரத்தில் அண்ணா முழக்கம்

தேர்தல் நிதிக்கு ரூ. 101 தரப்பட்டது

சென்னை, அக் 27—

சென்னை—இராயபுரம், பனைமரத்தொட்டி பகுதியிலுள்ள சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் இன்று மாலை 6 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் என் சிவரத்தினம் அவர்கள் தலைமை தாங்கினார்.

ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள்—ஆண்களும் பெண்களுமாகக் கருத்துரை பெறத் திரண்டு வந்திருந்தனர்.

தலைமை தாங்கிய தோழர் என். சிவரத்தினம் அவர்கள், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களின் தொண்டினை விளக்கிய பின், தோழர் மதிவாணன், தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியவர்கள் தொடர்ந்து பல அரிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

அடுத்து அண்ணா அவர்கள் நீண்ட கையொலிக்கிடையேயும் மக்களின் மகிழ்ச்சிப் பேராரவாரத்திற்கிடையேயும் எழுந்து நாட்டு அரசியல் நிலையைக் குறித்தும், சிங்காரவேலரின் சேவை குறித்தும், வரப்போகும் பொதுத் தேர்தலில் கழகம் ஈடுபடுவது குறித்தும், அரியதோர் கருத்துரை வழங்கினார்கள்.

கூட்டத்தில், அண்ணா அவர்களிடம், தேர்தல் நிதிக்காக ரூ. 101 வழங்கப்பட்டது.

வேலூரில் ஈ. வெ. கி. சம்பத்

அண்ணா படிப்பக திறப்பு விழாவிலும் தி.மு.க. பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டார்

வேலூர்—வேலப்பாடி 28-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் 28—10—56 மாலை 6-30 மணியளவில், பாட்டை வீதியில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் வி. ஜி. இராசரத்தினம் தலைமை தாங்கினார்.

கூட்டத்திற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்

தோழர்கள் அ கருத்தோவியன், போளூர் சுப்பிரமணியம் ஆகியோர் பேசியபின், தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள் இன்றைய அரசியல் நிலை குறித்தும், கழகக் கொள்கைகளை விளக்கியும், டில்லியின் ஏகாதிபத்தியப் போக்கினைப் புள்ளிவிவரங்களோடு எடுத்துரைத்தும், கழகம் தேர்தலில் ஈடுபடுவது குறித்தும் அரியதோர் கருத்துரை வழங்கினார்.

தோழமை நூல் நிலையத்தைச் சேர்ந்த தோழர் வே. எ. பல்லவன் ரூ. 0—8—3 (33 காலணா)-வும், கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான ரூ. 25-2-9ம் தோழர் போளூர் சுப்பிரமணியம் அவர்களிடம் தேர்தல் நிதிக்காகத் தரப்பட்டது.

இதற்கு முன்பாக, கழனிக் காட்டுத் தெருவில், தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள் கழகக் கொடியை ஏற்றுவித்தும், அண்ணா படிப்பகத்தைத் திறந்து வைத்தும் சிறிதுநேரம் பேசினார்.

ஹங்கேரி மக்கள் கோருவது என்ன?

பேச்சுரிமை, எழுத்துரிமை வேண்டும்

தொழிற்சங்கத் தலைமை ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்

ரஷ்ய இராணுவம் திருப்பி அனுப்பப்பட வேண்டும்

புதாபெஸ்ட், அக். 30—

"சோவியத் இராணுவம் திரும்ப அழைக்கப்பட வேண்டும்; இரஷ்யாவிற்கும—ஹங்கேரிக்கும் உள்ள உறவு சமத்துவ அடிப்படையில் இருக்க வேண்டும்; பிரதிகூலமான எல்லா வர்த்தக ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்படவேண்டும்; வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்கள் அனைத்தும் பிரசுரிக்கப்பட வேண்டும்; தொழிற்சாலை வேலை நேரம், முறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்; தொழிற்சங்கத் தலைமை சனநாயகரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு தொழிலாளர்களின் உண்மையான நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பாடுபட வேண்டும்; கூட்டுறவுப் பண்ணைகள் தம்மிச்சையாகத் தோன்றுவதற்கு வழிமுறைகள் காணப்பட வேண்டும்; பத்திரிகைகளுக்கு முழு சுதந்திரம் தரவேண்டும்; பேச்சுரிமை தரப்பட வேண்டும்; போராட்டம் துவங்கிய அக்டோபர் 23-ம் நாள், தேசீய விடுமுறை நாளாக்கப்பட வேண்டும்.

"உரேனியம், பாக்சைட் போன்ற தாதுப்பொருட்கள், ஹங்கேரியின் காரியங்களுக்காகவே உபயோகப்படுத்தப்பட வேண்டும்."

என்பன போன்ற கோரிக்கைகளைக்கொண்ட பிரகடனம் ஒன்றை ஹங்கேரி பகுத்தறிவாளர் புரட்சிக் குழு ஒன்று வெளியிட்டிருப்பதாக புதாபெஸ்ட் வானொலி அறிவித்திருக்கிறது.

இந்தப் பிரகடனத்தை எழுத்தாளர் சங்கம், பத்திரிகையாளர் தொழிற்சங்கம் முதலியன ஆதரித்திருப்பதாகவும் வானொலி கூறுகிறது.

'பிராவ்தா'வின் போக்கு!

"ஹங்கேரியில் நடைபெறும் இந்த 'சுதந்திரப் போராட்டத்தை' ரஷ்யப் பத்திரிகையான 'பிராவ்தா' 'அமெரிக்க—பிரிட்டிஷ் ஏஜெண்டுகளின் தூண்டுதல்,' என்று பிரச்சாரம் செய்ய முற்பட்டிருப்பது கண்டு, புதாபெஸ்ட் மக்கள் அனைவரும், மிகவும் வருந்தினர்—கவலைப்படுகின்றனர்" என்று 'காபத் செப்' என்ற பத்திரிகை எழுதியிருப்பதாகவும், புதாபெஸ்ட் வானொலி கூறுகிறது.

மக்கள் பங்கு

"கடந்த செவ்வாயன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில், மக்கள் அனைவரும் நேரடியாகவோ, உணர்வு பூர்வமாகவோ பங்கு பெற்றிருக்கின்றனர். அவர்கள் இந்தப் பிரபலமான இயக்கத்தின் ஜனநாயக இலட்சியங்களை முழுவதுமாக ஒப்பியிருக்கின்றனர்" என்றும் அந்தப் பத்திரிகை எழுதியிருப்பதாக வானொலி அறிவிப்புக் கூறுகிறது.

கம்யூனிஸ்டு சின்னங்கள் மறைகின்றன!

இராணுவத்தினருக்கும் - போலீசாருக்கும், தற்காப்பு உள்நாட்டு இலாகா மந்திரிகள் புதிய உத்தரவு ஒன்று பிறப்பித்திருக்கின்றனராம்.

'காம்ரேட்' என்ற 'கம்யூனிஸ்டு' சொல்லால். இனி இராணுவத்தினரும் போலீசாரும் ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்ளக் கூடாது.

ஹங்கேரி மொழியில், 'காம்ரேட்' என்பதை, 'எல்வ்டார்ஸ்' என்று கூறுவராம்! இனி 'எல்வ்டார்ஸ்' என்று அழைப்பதற்கு மாறாக, 'பஜ்தார்ஸ்' என்றுதான் அழைக்கவேண்டும் என்பது உத்தரவு

'தார்ஸ்' என்பது, நண்பன் — தோழன் என்பதற்கான ஹங்கேரிச் சொல்.

'எல்வ்' என்றால் கொள்கை அல்லது நம்பிக்கை என்பது பொருளாகுமாம்!

'எல்வ்டார்ஸ்' என்றால், ஒருவரைப் போன்றே மற்றவரும் சிந்திக்கும் போக்குடையவர் என்பது பொருள். 'பஜ்' என்றால் 'குழப்பம்', 'தொல்லை' என்பது பொருளாம்! 'பஜ்தார்ஸ்' என்றால், 'ஆபத்துக் குதவும் நண்பன்', என்று பொருளாகுமாம். இனி 'பஜ்தார்ஸ்' என்றே ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்ள வேண்டுமாம்.

இனி போலீசாரும் இராணுவத்தினரும் ஹங்கேரி தேசீயச் சின்னங்களையே அணிந்து கொள்ள வேண்டும் என்றும், கம்யூனிஸ்டு சின்னங்களை வீசி எறிந்துவிட வேண்டும் என்றும், புதிய உத்தரவு கூறுகிறதாம்.

மாநில சீரமைப்புத் திட்டத்திற்குப் பின்னர்...!

புதிய மாநில சீரமைப்புத் திட்டம் அமுலுக்கு வந்தபின்னர் இந்திய யூனியனில் 14 மாநிலங்களும் 6 பிரதேசங்களும் இருக்கும்.

அசாம், ஒரிசா, உத்திரப்பிரதேசம், ஜம்மு—காஷ்மீர் ஆகிய பகுதிகளில் மாறுதல் ஏதும் இல்லை.

சென்னை :

புதிய மாநில அமைப்பில், கேரளத்திற்குச் சில பகுதிகளையும், மைசூருக்கு சில பகுதிகளையும் சென்னை கொடுத்துவிட வேண்டியதாயிற்று. எல்லையோரங்களில் சில காட்டுப் பகுதிகள் அதற்கு இல்லாமல் போய்விட்டது; ஆனால் அரிசி, உப்பு முதலியன உற்பத்தியாகும் சில பகுதிகள் சென்னைக்குக் கிடைத்துள்ளது அந்தப் பகுதிகள் கன்னியாகுமரி மாவட்டமாக இயங்கும்.

புதிய மாநில அமைப்புக்குப் பிறகு சென்னையின் பரப்பளவு 50,110 சதுர மைல்கள் ஆகும் சென்னை மாநிலத்தில் வாழும் மக்களின் தொகை 300 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போது சென்னை மாநிலத்தில் அதிக தொழில் முன்னேற்றம் இல்லை. இதற்குள்ள ஒரே ஒரு பெரிய திட்டம் தென்னாற்காட்டில் உள்ள பழுப்பு நிலக்கரித் திட்டம்தான்.

மற்றும் மேட்டூர், பைக்காரா, மோயார், பாபநாசம் மின்சாரத் திட்டங்கள் முக்கியமானவை.

ஆந்திரம் :

இந்தியாவில் தெலுங்குதான் இந்திக்கு அடுத்தாற்போல் அதிகப்படியான மக்கள் பேசும் மொழி ஐதராபாத் மாநிலத்திலிருந்து பெரியதோர் பகுதி ஆந்திரத்தோடு சேர்க்கப்பட்டுவிட்டது.

புதிய ஆந்திர மாநிலத்தின் பரப்பளவு 1,05,963 சதுரமைல்; மக்களின் தொகை 3,12,60,000.

பம்பாய் :

புதிய பம்பாய் மாநிலத்தில் சௌராஷ்டிரா பகுதிகளும், மராத்தி பேசும் ஐதராபாத் பகுதிகளும், மராத்தி பேசும் மத்தியப் பிரதேசப் பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இது இரு மொழி மாநிலமாகும் 250 இலட்சம் மராத்தி பேசுகிற மக்களும், சுமார் 160 இலட்சம் குசராத்தி பேசுகிற மக்களும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளனர். பரப்பளவில் பம்பாய்தான் பெரிய மாநிலம் (1,90,919 சதுர மைல்கள்) ஆகும்.

இதன் மக்கள் தொகை 480 - இலட்சம்.

கேரளம் :

இந்த மாநிலத்தில், பழைய திருவாங்கூர் - கொச்சியுடன், செங்கோட்டையின் ஒரு பகுதி நீங்கலாக கொல்லம் மாவட்டமும், மலபார் மாவட்டமும், காசர்கோடு தாலுகாவும் சேர்க்கப்பட்டுள்ளது.

இதன் பரப்பளவு 15,035 சதுர மைல்கள்; மக்கள் தொகை 1,35,50,000.

மத்தியப் பிரதேசம் :

பழைய மத்தியப் பிரதேச மாநிலத்துடன், போபால், விந்தியப் பிரதேச மாநிலம், இராஜஸ்தானின் சில பகுதிகளும் சேர்க்கப்பட்டு இந்தியாவில் இது இரண்டாவது பெரிய மாநிலமாக அமைந்துள்ளது.

இதன் பரப்பளவு 1,71,201 சதுர மைல்கள்; மக்கள் தொகை சுமார் 260 இலட்சம்

மைசூர் :

முன்பு கன்னடம் பேசும் மக்கள் பம்பாய் — ஐதராபாத் — சென்னை ஆகிய மாநிலங்களில் இருந்து வந்தனர். புதிய மைசூர் மாநிலம், பிரிந்துகிடந்த கன்னடம் பேசும் மக்களை ஒன்று சேர்த்துள்ளது முதல் தடவையாக மைசூருக்குக் கடற்கரை ஏற்பட்டுள்ளது. மின்சார வசதியும், அடர்ந்த காடுகளும் நிறைந்த மாநிலம்.

இதன் பரப்பளவு 74,326 சதுர மைல்கள்; மக்கள் தொகை 190 இலட்சம்.

பஞ்சாப் :

புதிய பஞ்சாப் மாநிலம், பஞ்சாப்—பெப்சு மாநிலங்களின் கூட்டாகும்.

இதன் பரப்பளவு 47,456 சதுர மைல்கள்; மக்கள் தொகை சுமார் 160 இலட்சம்.

மேற்கு வங்கம்—பீகார் :

இது மொழிவாரி அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டதல்ல. பீகார் மாநிலத்தில் சில பகுதிகளும் மான்பூம் மாவட்டத்தின் சில பகுதிகளும் சேர்க்கப்பட்டதாகும்.

பீகாரின் பரப்பளவு 67,300 சதுர மைல்கள்; மக்கள் தொகை 388 இலட்சம்.

இராஜஸ்தான் :

பழைய இராஜஸ்தான் மாநிலத்துடன் ஆஜ்மீர் சேர்க்கப்பட்டு புதிய இராஜஸ்தான் மாநிலம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் பரப்பளவு 1,32,078 சதுர மைல்கள்; மக்கள் தொகை 159 இலட்சம்.

இந்தியாவின் புதிய மாநிலங்கள் பரப்பளவும்—மக்கள் தொகையும்

1951-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு, புதிய மாநிலங்களின் மக்கள் தொகையும், பரப்பளவும் தரப்பட்டுள்ளது :—

மாநிலம்	பரப்பளவு (ச. மை.)	மக்கள் தொகை
ஆந்திரம்	 1,05,962	 3,12,59,815
அஸ்ஸாம்	 85,012	 90,43,707
பீகார்	67,300	 3,88,27,517
பம்பாய்	 1,90,919	 4,82,65,120
ஜம்மு—காஷ்மீர்	 62,780	 44,00,000
கேரளம்	 15,035	 1,35,49,118
மத்திய பிரதேசம்	 1,71,201	 2,60,95,680
சென்னை	 50,110	 2,99,74,936
மைசூர்	 74,347	 1,94,01,612
ஒரிசா	 60,136	 1,46,45,946
பஞ்சாப்	 47,456	 1,61,34,890
இராஜஸ்தான்	 1,32,078	 1,59,46,731
உத்திர பிரதேசம்	 1,13,409	 6,22,15,742
மேற்கு வங்கம்	 33,809	 2,62,56,647

மகளிர் மன்றம் துவக்க விழா

★

4-11-56 மாலை 5-மணிக்கு, சென்னை—பெத்துநாயக்கன் பேட்டை அம்மன் கோயில் தெருவிலுள்ள டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர் நிலைப்பள்ளியில் மகளிர் மன்றத் துவக்க விழா நடைபெறும்.

டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் தலைமை தாங்குவார்; மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மன்றத்தைத் துவக்கி வைப்பார்; தோழியர்கள் பலர் பேசுவர்; அண்ணா அவர்கள் கருத்துரை வழங்குவார்.

பம்பாய்—தாராவி தி. மு. க. உறுப்பினர்களுக்கு :

3—11—56 மாலை 6-மணிக்கு 'திராவிடாகம்'தில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; பம்பாய் தி மு. க. மத்தியக்குழுவில் நிறைவேற்றப்பட்ட 'உறுப்பினர்களின் ஒரு நாளைய முழு ஊதியத்தைத் தேர்தல் நிதிக்கு செலுத்த வேண்டும்' என்ற தீர்மானம் குறித்து நிதிக்குழு உறுப்பினர்கள் பேசுவர்.

கழகக் கூட்டம்

★

பெருமகளூர் :
அம்மன் கோவில் திடல்
3—11—56 மாலை 5 மணிக்கு

தலைவர் : ஆர். முத்து
பேசுவோர் :
என். வி. நடராசன்
என். எஸ். இளங்கோ
கு. அடைக்கலம்

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயற் குழு

"4-11-56 காலை 9-மணிக்கு, செங்கற்பட்டு மாவட்ட செயற்குழு, செங்கற்பட்டு நகரச் செயலாளர் ஈ. பலராமன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்; அதுபோது, தேர்தல் ஆக்க வேலைகள், வரவு—செலவு, மற்றும் இதர பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படும்"

என்று செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் கி. ந. சம்பந்தம் அவர்கள் அறிவிக்கிறார்.

திடீரெனச் சென்று திரும்பியதையும் ஒருசேர நோக்கினால், இஸ்ரேல் எகிப்துமீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்ததே பிரெஞ்சு—பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களின் சம்மதத்துடன் என்பதல்ல — தூண்டுதலினால்தானே என்ற பொதுவான சந்தேகம் உலக மக்களிடை வலுத்து வருகிறது.

பிரிட்டிஷ்-பிரஞ்சுப் படைகள் சூயஸ் பகுதியில் நுழைந்தன!

சூயஸ் சிக்கலில் கண்ட தோல்வியின் எதிரொலியா?

ஆக்கிரமிப்பில் ஈடுபட இஸ்ரேலைத் தூண்டியது எவர்?

உரிமையை விட்டுக் கொடுக்க நாசர் மறுக்கிறார்

மத்தியக் கிழக்கில், அண்மையில் சூயஸ் தகராறை ஒட்டி சூழ்ந்து, சற்று மறைந்திருந்த போர் மேகங்கள் இப்போது கறுத்துவிட்டன. பெரும் யுத்த மழைக்கான முன்னறிவிப்பு தரப்பட்டுவிட்டது. 'பேரிடி'கள் கேட்கின்றன; 'மின்னல்'கள் கண்ணைப் பறிக்கின்றன!

'எகிப்துமீது இஸ்ரேல் ஆக்கிரமிப்பு யுத்தத்தை நேற்று முன் தினம் துவக்கிற்று; சூயஸ் நோக்கி, இஸ்ரேல் படைகள் விரைகின்றன—சூயசை நெருங்கிவிட்டன' என்ற செய்தி கிடைத்த நேரத்திலேயே, எகிப்து எதிர்த் தாக்குதலைத் துவக்குவதற்கு முன்பாகவே, 'இஸ்ரேலும் எகிப்தும் 12 மணி நேரத்திற்குள் சண்டையை முடித்துக் கொள்ளாவிட்டால் சூயசைக் காப்பதற்காகப் பிரெஞ்சு—பிரிட்டிஷ் படைகள் எகிப்திற்குள் நுழையும்' என்று பிரிட்டன் அறிவித்தது.

இந்த அறிவிப்புப் பற்றி எகிப்திய சர்க்கார் கருத்தறிவித்த மறுகணமே, பிரிட்டிஷ்—பிரெஞ்சுப் படைகள் எகிப்திற்குள் நுழைந்துவிட்டதாகச் செய்தி கிடைத்துள்ளது

'பாரசூட் வீரர்களை ஏற்றிக்கொண்டு, சைப்ரசிலிருந்து பிரிட்டிஷ் விமானங்கள், எகிப்தியத் துறைமுகமான போர்ட் செயிடில் இறங்கிவிட்டன; படைகள் வேகமாக அனுப்பப்படுகின்றன' என்று வெளிவந்துள்ள செய்திகளை உறுதி செய்யவோ மறுத்துரைக்கவோ பிரிட்டிஷ் யுத்த மந்திரி அலுவலகத்தவர் மறுத்துவிட்டனராம்.

மக்கள் சபையின் அனுமதியாம்!

இஸ்ரேலும், எகிப்தும் சண்டையை நிறுத்தாவிட்டால், சூயஸ் கால்வாய் பகுதிக்குள் இராணுவத்தை அனுப்புவதற்கு, பிரிட்டிஷ் பிரதமர் ஈடன், மக்கள் சபையில் அனுமதி பெற்றிருக்கிறாராம்.

அவரது இந்த முடிவுக்குச் சாதகமாக 270 வாக்குகளும், எதிராக 218 வாக்குகளும் கிடைத்தனவாம்.

சபையை ஒத்திவைக்கவும், ஈடன் சர்க்காரின் இந்த முடிவுக்காக அவர்களைக் கண்டிக்கவுமாக தொழிற் கட்சியினர் கொண்டு வந்த கண்டனத் தீர்மானம் தோல்வியுற்றிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

தற்காலிக ஏற்பாடாம்!

சூயஸ், போர்ட்செயிட், இஸ்மாலியா ஆகிய இடங்களில், முக்கியக் கேந்திரங்களில் மட்டும் பிரெஞ்சு—பிரிட்டிஷ் துருப்புகள் முகாமிடும் என்றும், இஸ்ரேல்—எகிப்து பகை முடியும்வரை மட்டுமே தற்காலிகமாக இராணுவத்தினர் தங்கியிருப்பர் என்றும், ஈடன், மக்கள் சபையில் விசித்திரமானதோர் வியாக்கியானம் செய்தாராம்!

இந்த ஏற்பாட்டிற்கு ஒப்ப வேண்டுமென எகிப்தையும் கேட்டிருப்பதாகவும் அவர் கூறினாராம்

நோக்கம் என்ன?

இப்படி இராணுவத் தலையீட்டில் பிரிட்டன் ஈடுபடுவதன் நோக்கம் எல்லாம், சண்டையிடும் இருசாராராலும் சூயஸ் கால்வாயில் போக்குவரத்திற்கு ஏற்படக்கூடிய ஆபத்தைத் தவிர்ப்பதே என்றும் ஈடன் விளக்கம் தந்தாராம்.

ஐ. நா. பாதுகாப்புச் சபை, இந்த விவகாரம் குறித்து மேலும் விவாதம் நடத்துமுன்னர், பிரிட்டன் இராணுவ நடவடிக்கை எதிலும் ஈடுபடாது என்று உறுதியளிக்க வேண்டும் என்று தொழிற்கட்சித் தலைவர் கெயிட்ஸ்கல் கேட்டபோது, ஈடன் அத்தகு உறுதிமொழிதர மறுத்துவிட்டாராம்.

★

'உரிமையை விட மாட்டோம்'

நாசர் முழக்கம்

"எந்தக் காரணங்களாலும், சூழ்நிலைகளாலும் பிரிட்டனின் முடிவை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கில்லை. அந்த முடிவு, எகிப்தின் சுதந்திர உரிமையையும், கௌரவத்தையும் பாதிப்பது என்பது மட்டுமின்றி; ஐ நா. சாசனத்திற்கும் விரோதமானதாகும்"

என்று, பிரிட்டிஷ் — பிரெஞ்சு தூதுவர்களை அழைத்து கெய்ரோவில், எகிப்தியத் தலைவர் நாசர் எடுத்துரைத்திருக்கிறார்.

இந்த நிலை கேட்டு அமெரிக்க வட்டாரங்கள் அதிர்ச்சியடைந்திருப்பதாகவும், இஸ்ரேல்—எகிப்திய சண்டை குறித்து பிரெஞ்சு—பிரிட்டிஷ் சர்க்கார் பிரதிநிதிகள் விவாதிக்கும்போது அதில் அமெரிக்கா கலந்துகொள்ள அழைக்கப்படவில்லை என்றும் லண்டனில் கூறப்பட்டிருக்கிறது.

இஸ்ரேல் ஏற்கிறதாம்

பிரிட்டன் தந்த இறுதி எச்சரிக்கையை இஸ்ரேல் ஏற்கத் தயார் என்றும், ஆனால் எகிப்தும் யுத்த நிறுத்தத்திற்குச் சம்மதம் தரவேண்டும் என்றும் இஸ்ரேல் சர்க்கார் அறிவித்துள்ளதாம்.

எகிப்திய சர்க்காரின் நிலையும், பிரிட்டிஷ் — பிரெஞ்சு சர்க்கார் கருத்துக்களும் ஐ நா., மற்றும், இந்தியா உட்பட காமன்வெல்த் நாடுகள், மற்றும் அமெரிக்கா, ரஷ்யா ஆகியவற்றிற்கும் தெளிவாக்கப்பட்டுள்ளன.

சிரியாவில் எதிரொலி

சிரியாவில், பிரிட்டனின் 'போர் முஸ்தீபு'களின் எதிரொலியாக இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்றும், பிரதமரான சாப்ரி எல் அசாலி, இராணுவ கவர்னராக குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், சிரிய இராணுவம் முழுவதும் அவரது ஆணையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் பெய்ரூத் செய்தி கூறுகிறது.

இராணுவம் உஷார்படுத்தப்பட்டுள்ளதுடன், மக்கள் எந்தவித அவசர நிலையையும் எதிர்பார்த்து ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் இவற்றைத் தவிர்க்கவேண்டுமெனவும் கேட்கப்பட்டிருக்கின்றனராம்.

சவூதி அரேபியாவில்......

இஸ்ரேல் தாக்குதலின் எதிரொலியாக, சவூதி அரேபியாவில் இராணுவ வரிசைகள் சரிபார்க்கப்

(2-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

படுகின்றன என்று பெய்ரூத் வானொலி அறிவித்திருக்கிறது.

சவூதி அரேபிய மன்னர் சாவூத் எகிப்தியத் தலைவர் நாசருக்கு அனுப்பியுள்ள தந்தி ஒன்றில், சவூதி அரேபிய இராணுவமும், மக்களும் ஆக்கிரமிப்பை முறியடிக்கத் தயாராகவிருக்கின்றன; அஞ்சேல்' என்று கூறியிருப்பதாக கெய்ரோ வானொலி அறிவிப்பு கூறுகிறது.

பொதுவான சந்தேகம்

'அல்ஜீரியாவில் போர் நிறுத்தம் வேண்டும்; சுதந்திரக் கோரிக்கையைக் கவனிக்கிறோம்' என்று பிரெஞ்சுப் பிரதமர் நேற்று முன் தினம் அறிவித்திருக்கிறார்.

இதற்குக் காரணம், பிரெஞ்சு இராணுவம் முழுவதும் (ஏறத்தாழ) அங்குதான் குவிந்திருக்கிறது. அங்கு 'போர் நிறுத்தம்' ஏற்பட்டாலன்றி, பிரெஞ்சு சர்க்காரிடம், இப்போது சூயசிற்கு அனுப்ப கணிசமான துருப்புகள் இருந்திருக்க முடியாது

இந்த அறிவிப்பு வந்த மறுகணமே, பிரிட்டிஷ் பிரதமர், பிரிட்டிஷ்—பிரெஞ்சுத் துருப்புகள் சூயசுக்கு விரையும்,' என்று அறிவித்திருக்கிறார்.

'சூயஸ் சிக்கலில், பிரெஞ்சு—பிரிட்டிஷ் வல்லரசுகளுக்கு பெரும் தோல்வி'கள்தான் ஏற்பட்டு வந்துள்ளன.

இந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளையும், பிரிட்டிஷ் பிரதமரும் வெளிநாட்டு மந்திரியும் கடந்த அக்டோபர் 15-ந் தேதியன்று பாரிசிற்குத்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.